வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 07.05.2025 புதன்கிழமை | இதழ் : 128 | பக்கங்கள் : 12

# தென்னிலங்கையில் ஆளும் கட்சி ஆதிக்கம்!

### பல சபைகளில் தனித்து ஆட்சியமைக்கும்

கொழும்பு, மே 07

இன்று அதிகாலை 2.30 மணி வரை வெளியான உத்தியோகபூர்வ தகவல்களின்படி தென்னிலங்கையில் பல உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி தனித்து ஆட்சியமைக்கும் நிலைமை உள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நேற்றிரவு முதல் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

அதிகாலை 2.30 மணி வரை அறிவிக்கப்பட்ட உத்தியோகபூர்வ முடிவுகளின்படி 4 இலட்சத்து 55 ஆயிரத்து வாக்குகளை 11

# ரணில் இந்தியா பயணம்!

கொழும்பு, மே 07

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாட்கள் பயணமாக நாளை வியாழக்கிழமை இந்தியா செல்கிறார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் ரணில் 11



# வியட்நாமிலிருந்து திரும்பி வாக்களித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, மே 07

வியட்நாமில் இருந்து நேற்று நாடு திரும்பிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தார்.

நாடு திரும்பிய சிறிது நேரத்திலேயே தனது ஜனநாயக கடமையை அவர் நிறைவேற்றினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வியட்நாமுக்கு மூன்றுநாள் பயணம் மேற்கொண்டிருந்தார். இதனை நிறைவு செய்து நேற்று நாட்டை வந்தடைந்தார் என்று கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரி தெரிவித்தார். 11

# தமிழர் வாழ் பகுதிகளில் தமிழ் கட்சிகள் முன்னிலை!

- யாழில் தமிழ் அரசு, காங்கிரஸ் இடையே போட்டி
- ஈ. பி. டி. பி. கட்சிக்கு பெரும் சரிவு
- தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு

யாழ்ப்பாணம், மே 07

**நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் பிரதேசங்களில் தமிழ்த் தேசிய கட்சிகள் முன்னிலை பெற்றுள்ளன. குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆதிக்கம் செலுத்துகிறது. எனினும், ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி பின்ன டைவை சந்தித்துள்ளது.**

உத்தியோகபூர்வ முடிவுகளின்படி கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளில் இரண்டு சபைகளில் தனித்து ஆட்சி அமைக்கும் பெரும்பான்மைய இலங்கை தமிழ் அரசுக் கட்சி பெற்றுள்ளது. பூநகரி பிரதேச சபையில் ஓர் ஆசனத்தால் பெரும்பான்மை பெறத் தவறியுள்ளது. அங்கு கூட்டாக அல்லது மற்றொரு தமிழ்த் தேசிய கட்சியின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கும் சூழல் உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் தமிழ் அரசு கட்சி தனித்து ஆட்சியமைக்கக்கூடிய ஆசனங்களை வென்றுள்ளது. மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச சபைகளில் அந்தக் கட்சி முன்னிலை வகிக்கிறது. 11

# கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் அரசு கட்சி ஆதிக்கம்

கிளிநொச்சி, மே 07

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தனித்து ஆட்சியமைக்கும் நிலைமை உள்ளது.

37 உறுப்பினர்களை கொண்ட கரைச்சி பிரதேச சபையில் 72 ஆயிரத்து 755 வாக்குகள் பதிவாகின. 41 ஆயிரத்து 767 வாக்குகள் அளிக்கப்பட்டன. ஆயிரத்து 29 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

20 ஆயிரத்து 962 வாக்குகளை பெற்று இலங்கை தமிழ் அரசு கட்சி 20 ஆசனங்களை 11

# 3 முன்னாள் ஜனாதிபதிகள் நேற்று வாக்களிக்கவில்லை

கொழும்பு, மே 07

நேற்று நடந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வாக்களிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் வருகைக்காக அந்தந்த பகுதிகளில் செய்தியாளர்கள் காத்திருந்த நிலையில், அவர்கள் வாக்களிக்க வரவில்லை என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இந்தத் தகவலை முன்னாள் ஜனாதிபதிகள் எவரும் மறுப்பு வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வல்வெட்டித்துறையில் காங்கிரஸ் முன்னிலை!

வடமராட்சி, மே 07

நடைபெற்று முடிந்த உளளூராட்சி தேர்தலில் வல்வெட்டித்துறை நகர சபையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னிலை பெற்றுள்ளது.

இன்று அதிகாலை வெளியான உத்தியோகபூர்வ தகவலின்படி,

அந்த சபையில் மொத்தமுள்ள 16 ஆசனங்களில் அகில இலங்கை தமிழ் அரசு கட்சி 7 ஆசனங்களை பெற்றுள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சி 5 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன.

(ஐ)

# 50 சதவீதமானவர்களே தேர்தலில் வாக்களிப்பு

### வடக்கில் 61 சதவீதம்!

கொழும்பு, மே 08

நாடளாவிய ரீதியில் நேற்று நடந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் 61 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது. இதன்படி, யாழ்ப்பாணத்தில் 57 சதவீதம், முல்லைத்தீவில் 60 வீதம், மன்னாரில் 70 வீதம், வவுனியாவில் 60 வீதம், கிளிநொச்சியில் 60 வீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன. 11

# இலங்கை வரலாற்றில் அமைதியான தேர்தல்!

### இது நாட்டின் அரசியல் கலாசாரமாக மாறவேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 07

அமைதியாக தேர்தல் நடைபெறுவது இலங்கையில் அரசியல் கலாசாரமாக மாற வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் வாக்களித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து 11

# உலக வங்கியின் தலைவர் இன்று இலங்கை வருகிறார்!



கொழும்பு, மே 07

உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா இன்று புதன் கிழமை நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு முக்கிய அங்கமாக அஜய் பங்காவின் வருகை அமையவுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா விடுத்த அழைப்பின் பேரிலேயே அஜய் பங்கா நாட்டுக்கு வருகை தருகிறார். அஜய் பங்காவின் வருகை உலக வங்கி மற்றும் இலங்கைக்கு இடையிலான 70 ஆண்டுகள் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளே இங்கு ஆட்சி அமைக்கும் நிலை

## சித்தார்த்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே. 07

தமிழ்க் கட்சிகளே சபைகளில் ஆட்சி அமைக்கும் நிலை காணப்படுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் தனது வாக்கை அளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமது உள்ளூர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான நபரை தெரிவு செய்வதற்காக மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபடுகின்றனர்.

அந்தவகையில் எமது கட்சியைப் பொறுத்தவரை வெற்றிக்கான வாய்ப்புக்கள் எங்குமே பிரகாசமாகக் காணப்படுகின்றன.

பல சபைகளை நாங்கள் கைப்பற்றுவதற்கு ஏதுவான நிலை காணப்படுகின்றது. அத்துடன் இன்றைய சூழ் நிலையில் ஜே.வி.பிக்கு வாக்களிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது.

சபை அமைக்கின்றபோது தமிழ்க் கட்சிகள் சேர்ந்துதான் சபை அமைக்கும் நிலைமை காணப்படுகிறது. இதுவே நடக்கும் என நினைக்கிறேன்-என்றார். (அ)



கதிர்காமம் யாத்திரிகர்களுக்கு ஓம் ரி.வி அனுசரணை ஊடாக முரசுமோட்டை 04ஆம் கட்டை சிவன் கோவிலில் வைத்து உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன. (அ)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்த பதில் அரச அதிபர்!

யாழ்ப்பாணம், மே. 07

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தல் வாக்களிப்பு யாழ்ப்பாண மாவட் டத்தில் அமைதியான முறை யில் நடைபெற்ற நிலையில் சில வாக்களிப்பு நிலையங்களுக்கு பதில் மாவட்ட செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தார்.

வாக்களிப்பு மாலை 4 மணி யுடன் நிறைவடைந்தது. வாக் களிப்பு நிலையங்களிலேயே வாக்கு எண்ணும் பணிகள் மாலை ஆரம்பமாகின. (அ)



# வவுனியா மாவட்டத்தில் 59.56 வீதம் வாக்களிப்பு!

வவுனியா, மே. 07

வவுனியாவில் 59.56 வீத வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி பி.ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

வாக்களிப்பு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றுக் காலை ஆரம்பமாகிய நிலையில் வவுனியாவில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. காலை முதல் மக்கள் ஆர்வத்துடன் சென்று வாக்களித்தநிலையில் மாலை 4 மணியுடன் வாக்களிக்கும் நடவடிக்கை நிறைவுக்கு வந்தது.

வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய 5 சபைகளுக்கும் 86 வட்டாரங்க



ளில் 103 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1231பேர் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 29ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில்154 வாக்களிப்பு நிலையங்களும் 56 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டன. பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் அமைதியான வாக்களிப்பு இடம் பெற்றது.

இதேவேளை, வாக்களிப்பு செயற்பாடுகள் சுமுகமாக இடம்பெற்றது. மாவட்டத்தில் பாரதூரமான தேர்தல் வன்முறைகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை-என்றார். (அ)

# தமிழகத்தில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக வந்தவர் கைது!

யாழ்ப்பாணம், மே. 07

தமிழகத்தில் இருந்து நெடுந்தீவு பிரதேசத்துக்குள் சட்டவிரோதமான முறையில் நுழைய முற்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2023ஆம் ஆண்டு மன்னார்ப் பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் படகு மூலம் தமிழகம் இராமேஸ்வரம் பகுதிக்குச் சென்று தஞ்சமடைந்த நபர் மீண்டும் இலங்கைக்குள் படகு மூலம் சட்டவிரோதமான முறையில் நுழைந்துள்ளார்.

குறித்த நபர் படகில் நெடுந்தீவு கடற்பகுதியை அண்மித்தபோது கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மரக்கறி விலை உச்சம்!

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாண மரக்கறி சந்தைகளில் மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்ந்துள்ளது.

அந்தவகையில் ஒரு கிலோகிராம் தக்காளி, கரட் என்பன 1000 ரூபாவுக்கும், கத்தரி 600 முதல் 800 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பச்சை மிளகாய் மட்டும் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# தமிழரசு உறுப்பினர் கைது!

கிளிநொச்சி, மே. 07

கிளிநொச்சியில் நேற்று தனது ஓட்டோவில் வாக்காளர்களை ஏற்றிஇறக்கிய தமிழரசுக் கட்சி உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்காளர்கள் பலரை தனது ஓட்டோவில் ஏற்றி இறக்கிக்கொண்டிருந்தபோது அவர் தனது கட்சிக்கு வாக்களிக்குமாறு வலியுறுத்தியதாக தேர்தல் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு பொலிஸாருடன் சென்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரை கைது செய்து பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (அ)

# அல்வாயைச் சேர்ந்த இளைஞன் கம்பர்மலையில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணம் கம்பர் மலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அல்வாய் வடமத்தி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே நேற்று முன் தினம் மாலை 3:00 மணியளவில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நண்பர்களுடன் சென்ற நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இறப்புக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

சடலம் உடற்கூற்று சோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கதிர்காமம் யாத்திரிகர்களுக்கு இயக்கச்சியில் உதவி வழங்கல்



வடமராட்சி, மே. 07

கதிர்காமம் பாத யாத்திரிகர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் இயக்கச்சி, கரந்தாய் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து உதவிகள் வழங்கப்பட்டன.

சைவமரபு - பாரம்பரியமிக்க கதிர்காமம் பாதயாத்திரிகர்களை கரந்தாய் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து தேநீர் பொருள்கள் மற்றும் சவர்க்கார வகைகள், பிஸ்கட் வகைகள் என்பனவற்றை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினர்.

இந்த உதவித் திட்டம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
07.05.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியலை முன்னகர்த்தும் வழி

தேர்தல் காலங்களில் உணர்ச்சிகரமான அறிக்கைகளை வெளியிடுவதில் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு நிகர், தமிழர் தரப்புகள் மட்டும்தான். உள்ளூராட்சித் தேர்தலை முன்வைத்தும் அவ்வாறான உணர்ச்சிவச அறிக்கைகள் வெளியாகியிருந்தன. கடந்த பதினைந்து வருட கால அரசியலில் முள்ளிவாய்க்காலை முன்னிலைப்படுத்தி, ஜனாதிபதித் தேர்தலை முன்னிலைப்படுத்தி, பாராளுமன்றத் தேர்தலை முன்னிலைப்படுத்தி இவ்வாறான அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், அரசியலில் கழிந்த காலத்தை திரும்பிப் பார்த்தால், என்ன எஞ்சியிருக்கின்றது என்னும் கேள்வி மட்டுமே எஞ்சியிருக்கின்றது. இறுதியில் உள்ளூராட்சித் தேர்தலை முன்வைத்து, தேசமாக திரளுங்கள் என்று அறிக்கை வெளியிடுமளவிற்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது.

பொதுவாக தென்பகுதி அரசியலில்தான் ஒவ்வொரு தேர்தல் கால கட்டத்திலும் சிங்கள தேசியவாதத்தை தூக்கி நிறுத்துவதற்கு புதிய சுலோகங்கள் தேவைப்படுவதுண்டு. யுத்த காலத்தில் 'கொட்டி ரஸ்தவாதய' என்பதே அனைத்து சிங்கள கட்சிகளினதும் தாரக மந்திரமாக இருந்தது - பின்னர், மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் 'யுத்த வெற்றி' என்பது சிங்கள தேசியவாத சுலோகமாக இருந்தது. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சிங்கள தேசியவாதத்தை தூக்கி நிறுத்துவதற்கான புதிய சுலோகத்திற்கு தென்பகுதியில் பெறுமதி இல்லாமல் போய்விட்டது.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்னும் கூற்றுக்கு ஒப்பாக, பொருளாதார நெருக்கடி சிங்கள தேசியவாதத்தை தூக்கி நிறுத்தும் அரசியல் போட்டியை பெருமளவில் பலவீனப்படுத்திவிட்டது. இந்த இடைவெளியில்தான் ஊழலற்ற இலங்கை என்னும் சுலோகத்தோடு தேசிய மக்கள் சக்தி மகுடம் தரித்திருக்கின்றது. இந்த விடயத்தை தமிழ் அரசியல் தரப்புகள் எந்தளவு தூரம் உன்னிப்பாக அவதானித்திருக்கின்றது என்பது கேள்வியே! ஈழத் தமிழ் அரசியல் கருத்துருவாக்கங்கள் பெருமளவிற்கு அரசியல் கற்பனாவாதத்தை தாலாட்டும் பணியையே செய்ய முயற்சிக்கின்றன. இதனால்தான், உள்ளூராட்சித் தேர்தலிலும் தேசமாகத் திரளுங்கள் என்னும் கோஷம் தேவைப்பட்டிருக்கின்றது.

உண்மையில் ஒரு தேர்தல் வெற்றியை அல்லது தோல்வியை முன்வைத்து ஒரு மக்கள் கூட்டத்தின் அரசியல் எதிர்காலம் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. தேர்தல் காலத்தில் ஒரு கட்சி, ஒரு குறிப்பிட்ட சுலோகத்தை முன்வைத்து வெற்றிபெற்றுவிட்டால் எல்லாப் பிரச்னையும் தீர்ந்துவிடும் என்பது போல், பாவனை செய்யும் அரசியல் தோல்வியுற்று நெடுங்காலமாகிவிட்டது. ஆனாலும் ஈழத் தமிழ் அரசியல் கருத்துருவாக்கங்கள் தொடர்ந்தும் இவ்வாறான கற்பனைகளுக்குள் சிக்கிக்கிடப்பதானது, ஒரு வகையில் ஈழத் தமிழ் சமூகத்தின் சாபக்கேடாகும். ஒரு குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அமைவாக, ஒரு குறிப்பிட்ட தமிழ் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாக்களித்து விட்டால் தமிழ் மக்களுக்கு உப்பரிகை கிடைத்து விடும் என்றால், 1977 பொதுத் தேர்தல் வாக்களிப் புடன், தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தீர்ந்திருக்க வேண்டுமல்லவா?

அரசியல் நகர்வுகளை உள்ளும் புறமுமாக தெளிவாக அவதானித்து, அதற்கேற்ப சூழ்நிலையை கையாளும் அரசியலை முன்னெடுப்பது மட்டும்தான், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை செப்பனிடுவதற்கான ஒரேயொரு வழியாகும். மற்றும்படி, தேர்தல் வெற்றி, தோல்விகள் என்பவை இங்கு ஒரு விடயமல்ல. எவரும் வெற்றிபெறலாம் - எவரும் தோல்வியுறலாம் - பின்னர் தோல்வியுற்றவர் வெற்றிபெறலாம். விடயம், தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தி, முன்செல்வதற்கு, தமிழ் கட்சிகளிடம் எவ்வாறான தூரநோக்கும், அதனை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டமும் உண்டு?

# அம்மை, டெங்கு, இன்புளுநாவன்ஸா நோயாளர் எண்ணிக்கை உயர்வு!

கொழும்பு, மே. 07

நாட்டில் அம்மை, டெங்கு மற்றும் இன்புளுவன்ஸாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழையுடன் நுளம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் டெங்கு மற்றும் சிக்கின்குனியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் குழந்தைகள் நல மருத்துவர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சலைப் போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஏடிஸ் எஜிப்டி நுளம்பு இனத்தால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த நோயின் முக்கிய அறிகுறிகள் அதிக காய்ச்சல், மூட்டு வலி, தோல் கருமையாக மாறுதல் மற்றும் சொறி போன்ற பாதிப்புக்கள் ஏற்படுமென தீபல் பெரேரா கூறினார்.

இதற்கிடையில், இந்த நாட்களில் இன்புளுவன்ஸா நோயாளர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருமல், காய்ச்சல் அல்லது சளி இருந்தால் முகக் கவசம் அணியவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



மூன்று நோய்களின் அறிகுறிகளும் ஒரே மாதிரியாக இருப்பதால், இரத்தப் பரிசோதனைகள் மற்றும் அன்ரிஜென் பரிசோதனைகள் மூலம் நோய்களை அடையாளம் காணவேண்டும்.

இந்த மூன்று நோய்களில் ஏதேனும் ஒன்றுக்கு நீங்கள் ஆளாகியிருந்தால், உடனடியாக மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும் என்று சிறப்பு மருத்துவர் தீபால் பெரேரா மேலும் தெரிவித்தார். (அ)

# கூரிய ஆயுதத்தினால் பொலிஸ் அதிகாரியை தாக்க முயன்ற நபர்!

## கட்டுநாயக்கவில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மே. 07

கட்டுநாயக்க 18 ஆவது மைல் கம்பம் பகுதியில் பொலிஸாரால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 10:00 மணியளவில் நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட நபர் இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், அந்த நபரைக் கைது செய்ய பொலிஸ் அதிகாரிகள் குழு சம்பந்தப்பட்ட பகுதிக்குச் சென்றது.

அங்கு சந்தேக நபர் ஒரு பொலிஸ் அதிகாரியை கூர்மையான ஆயுதத்தால் தாக்கினார்.

அப்போது, உடனடியாக பதிலளித்த சக பொலிஸ் அதிகாரிகள் சந்தேக நபரின் முழங்கால் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக சீதுவையில் உள்ள விஜய குமாரதுங்க நினைவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# 'லொக்கு பெட்டி' வீட்டில் கைக்குண்டு

கொழும்பு, மே. 07

பெலாரஸ் நாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட பாதாள உலக கும்பலைச் சேர்ந்த "லொக்கு பெட்டி" என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா என்பவரின் வீட்டிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக மேல்மாகாண தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

"லொக்கு பெட்டி"யிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் வெலிப்பன்ன தர்கா நகரத்தில் உள்ள அவரது வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த கைக்குண்டு கைப்பற்றப்பட்டது.

"லொக்கு பெட்டி" 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரிய பகுதியில் உள்ள பச்சை குத்தும் நிலையமொன்றின் திறப்பு விழாவின்போது சுரேந்திர வசந்த பெரேரா என அழைக்கப்படும் கிளப் வசந்த என்பவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் ஆவார்.

இது தொடர்பில் மேல் மாகாண தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும்.

**இடபம்**
பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும்.

**கன்னி**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வரும். முன்னேறும் நாள்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**விருச்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். மேலதிகாரி உதவுவார். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்.

# தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் முல்லைத்தீவில் நேற்றுக்காலை ஒருவர் கைது!

முல்லைத்தீவு, மே 07

தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் முல்லைத்தீவு, வள்ளிபுனம் பகுதியில் வைத்து நேற்றுக்காலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட வள்ளிபுனம் பகுதியில் வாக்குச்சாவடிக்கு அண்மித்த பகுதியில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் ஆதரவாளர் ஒருவர் சின்னம் அடங்கிய துண்டுப்பிரசுரத்தை மக்களுக்கு விநியோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். புதுக்குடியிருப்பு பொலிஸார், தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த நபரை கைது செய்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.



இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# அமைதியான முறையில் வவுனியாவில் வாக்களிப்பு





வவுனியா, மே 07

வவுனியாவில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

உளளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்றுக் காலை ஆரம்பமாகிய நிலையில் அமைதியான முறையில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன், மக்கள் ஆர்வத்துடன் சென்று வாக்களித்தனர்.

வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய 5 சபைகளுக்கும் 103 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1731 பேர் போட்டியிட்டனர்.

ஓர் இலட்சத்து 79 ஆயிரத்து 293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள நிலையில் 154 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்காக கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் வாக்கினை பதிவு செய்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வவுனியா மாநகர சபைக்காக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தமது வாக்கினை பதிவு செய்தார்.

(எ)

# மன்னாரில் மந்தகதியில் வாக்களிப்பு

மன்னார், மே 07

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை முதல் அமைதியான முறையில் நடைபெற்றன.

மன்னார் மாவட்டத்தில் காலை 09.00 மணி நிலவரப்படி 12 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் வாக்குப்பதிவுகள் இவ்வாறு இடம்பெற்றன.

மன்னார் மாவட்டத்தில் 91 ஆயிரத்து 373 வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றனர். 5 உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தும் 88 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மன்னார் நகர சபையில் 18 உறுப்பினர்களும், மன்னார் பிரதேச சபையில் 23 உறுப்பினர்களும், நானாட்டான் பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும், முசலி பிரதேச சபையில் 19 உறுப்பினர்களும், மாந்தை மேற்கு பிரதேச சபையில் 24 உறுப்பினர்களும் உள்ளடங்களாக கட்சி மற்றும் சுயேச்சைக் குழு சார்பாக 103 பேர் போட்டியிட்டனர்.

அவர்களில் மன்னார் நகர சபைக்கு 15 உறுப்பினர்களும், மன்னார் பிரதேச சபைக்கு 20 உறுப்பினர்களும், நானாட்டான் பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும், முசலி பிரதேச சபைக்கு 16 உறுப்பினர்களும், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 21 உறுப்பினர்களுமாக மொத்தம் 88 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 114 வாக்களிப்பு நிலையங்களில், வாக்களிப்புகள் நடைபெற்றன.

வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டத்தை மீறியிருப்பின் தண்டனையை எதிர்கொள்ள தயார்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, மே. 07

**மொறட்டுவையில் தான் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தேர்தல் சட்டத்தை மீறியதாகக் கருதப்பட்டால், தேர்தல் ஆணையகம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் தான் மதிப்பேன் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியுள்ளார்.**



பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

தேர்தல் சட்டத்தை மீறும் நோக்கத்துடன் அந்த அறிக்கையை வெளியிடவில்லை என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேநேரம், தற்போது சிறிய தவறுகள் கூட கேள்விக்குள்ளாக்கப்படுவது குறித்து பிரதமர் அமரசூரிய மேலும் மகிழ்ச்சி தெரிவித்தார்.இது அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் அறிகுறியாகும் என்றும் அவர் கூறினார்.

2025 உள்ளூராட்சித் மக்கள் சக்தி கட்சி ஆதரவாளர்கள் நுட்பமான வழிகளில் பிரசாரத்தை மேற்கொள்ளலாம் என்று மொறட்டுவையில் அவர் ஆற்றிய உரையின் மீதான விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் விதமாக பிரதமர் இவ்வாறு வெளியிட்டார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை தேர்தல் ஆணையகத்திடம் இந்த விடயத்தை எழுப்பி, அமைதியான காலத்தில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வது தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என்று சுட்டிக்காட்டியது.

சட்டத்தை மீறுவதற்கான வழிகள் குறித்து பிரதமரின் அறிக்கை தேர்தல் சட்டத்தை மீறுவதாகவும், சட்டத்தை புறக்கணிப்பதைக் காட்டுகிறது என்றும் பவ்ரல் ஆணையகத்துக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

முக்கிய அரசியல்வாதியான பிரதமரின் இத்தகைய அறிக்கை நாட்டின் அரசியல் கலாச்சாரத் திற்கு அச்சுறுத்தல் என்று கூறிய பவ்ரல், இது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்த லுக்கு அச்சுறுத்தலாகக் கரு தப்பட்டதால், விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்தை கேட்டுக் கொண்டது. (அ)

# தேர்தலில் பெரியளவிலான அசம்பாவிதங்கள் இல்லை!

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, மே. 07

தேர்தல் வாக்களிப்பில் சிறு சிறு சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் எந்தவொரு பாரிய அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வாக்களிப்பில் எந்தவித இடையூறும் இடம்பெறவில்லை எனவும் நேற்று காலை முதல் சுமூகமான முறையில் தேர்தல் இடம்பெற்றதாகவும் அவர் கூறினார். (அ)

# தலைமறைவான முன்னாள் இராஜாங்க அமைச்சருக்கு பகிரங்கப் பிடியாணை!

கொழும்பு, மே. 07

தலைமறைவாகியுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் மில்ரோய் பெரேரா ஆகியோரைக் கைது செய்யுமாறு நீதவான் பகிரங்க பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த 2 சந்தேகநபர்களும் தலைமறைவாகியுள்ளதாக நம்பப்படும் இடங்கள் தொடர்பில் சோதனை முன்னெடுக்கப்பட்ட போதிலும் சந்தேகநபர்களைக் கண்டறியமுடியவில்லை என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீரவுக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடைபெற்று வருவதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

அரசாங்க நிர்மாணமொன்றுக்காக விடுவிக்கப்பட்ட காணியை தனியார் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு முற்பட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்ததாக குற்றஞ்சுமத்தி இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. (அ)

# சிறை வடிகானிலிருந்து துப்பாக்கி ஒன்று மீட்பு!

கொழும்பு, மே 07

வெலிக்கடை சிறைச்சாலை வடிகானிலிருந்து துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே இந்த துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கி பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# இரட்டைக்கொலை சந்தேகநபரை கைது செய்ய உதவுமாறு கோரிக்கை

## மக்களிடம் பொலிஸார் விடுத்தனர்

கொழும்பு, மே 07

இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்வதற்கு சீதுவை பொலிஸார் பொது மக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

கடந்த 2024 டிசெம்பர் 28ஆம் திகதி சீதுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லியனகேமுல்ல, சீதுவை பிரதேசத்துக்கு காரில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் மூன்று நபர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். இதனையடுத்து சீதுவை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். எவ்வாறிருப்பினும் சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்று தலைமறைவாக இருக்கிறார்.

தலைமறைவாக உள்ள சந்தேகநபரான மொஹொமட் அஸ்மன் ஷெரிப்தின், தேசிய அடையாள அட்டை இலக்கம் - 911013363ஏ, முகவரி - இரத்தொலுகம, கட்டுவன வீதி, ஹோமாகம என்பதாகும். எனவே, படத்திலுள்ளவர் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் சீதுவை பொலிஸ் நிலையத்தின் 071 - 859 1637 அல்லது 011 - 225 3522 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு - பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

# மியன்மார் சைபர் முகாம்களில் இருந்து 15 இலங்கையர்கள் மீட்பு!

கொழும்பு, மே. 07

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மீதமுள்ள 15 இலங்கையர்களும் நேற்று மீட்கப்பட்டனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட முகாம்களில் உள்ள அனைத்து இலங்கையர்களும் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

கணேமுல்ல சஞ்சீவ படுகொலை

# செவ்வந்தியின் உருவத்தை ஒத்த பெண் ஒருவர் கைது!

கொழும்பு, மே. 07

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இஷாரா செவ்வந்தியின் உருவத்தை ஒத்த உருவத்தைக் கொண்ட பெண் ஒருவர் குளியாப்பிட்டிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - குளியாப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள காணி பதிவாளர் அலுவலகம் ஒன்றில் இஷாரா செவ்வந்தியின் உருவத்தை ஒத்த உருவத்தை கொண்ட பெண் ஒருவர் இருப்பதாக குளியாப்பிட்டிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த பெண்ணை உடனடியாக கைது செய்தனர்.

இது தொடர்பில் குளியாப்பிட்டிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.இஷாரா செவ்வந்தி தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ)

# லொறி மோதியதில் சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, மே 07

வீதியில் சென்ற சிறுமியை லொறி மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

பாதெனிய - அநுராதபுரம் வீதியில் நெலும்பத்வெவ பிரதேசத்தில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாதெனியவிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த சிறுமியை மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமி அம்பன்பொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

குருநாகல் , அம்பன்பொல பிரதேசத்தை சேர்ந்த 08 வயதுடைய சிறுமி ஒருவரே உயிரிழந்தார்.

இதனையடுத்து லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பகிடிவதை குறித்து விசாரணை இதுவரை 10 மாணவர்கள் கைது!

கொழும்பு, மே. 07

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்களின் பகிடிவதை முறைப்பாடு குறித்த விசாரணைகளில் மேலும் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஏப்ரல் 29 அன்று சமனலவேவா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுத் துறை மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

விசாரணைகளைத் தொடர்ந்து, தொழில்நுட்ப பொறியியல் பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களையும் ஏனைய கைது செய்யப்பட்ட மாணவர்களுடன் இணைத்து எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சம்பத்தின் முறைப்பாடு தொடர்பாக இதுவரை 10 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், சி.ஐ.டியினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர், பகிடிவதைச் சம்பவத்தைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மரணம் பகிடிவதையுடன் தொடர்புடையது என்று கூறி, சக மாணவர் ஒருவர் சமனலவேவா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டணம் உயரும் வரை நாணய நிதிய கடன் தாமதமாகும்!

**மத்திய வங்கி வட்டாரங்கள் தகவல்**

கொழும்பு, மே. 07

**மின்சார கட்டணத் திருத்தம் செய்யப்படும் வரை, சர்வதேச நாணய நிதியத்தின் ஐந்தாவது தவணைக் கடன் வெளியீடு தாமதமாகும் என செய்திகள் வெளியாகியுள்ளன.**

வங்கியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று முன் தினம் இதை உறுதி செய்தன என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் நான்காவது மதிப்பாய்வுக்கு சர்வதேச நாணய நிதிய ஊழியர் மட்ட உடன்பாடு ஏற்கனவே கிடைத்திருந்தாலும், இலங்கைக்கு அடுத்த கடன் தவணையான 344 மில்லியன் அமெரிக்க டொலர்களை வெளியிடுவதற்கு குழுவின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

அதன்படி, அடுத்த நாணய நிதியக் கடன் தவணையை விடுவிப்பதற்கு, செலவு ஈடு கட்டும் மின்சார விலையை மீட்டெடுப்பது ஒரு அத்தியாவசிய நிபந்தனையாகும். அதை நிறைவேற்றுவதில் ஏற்படும் தாமதம், சர்வதேச நிதியத்திலிருந்து அடுத்த கடன் தவணையை வழங்குவதையும் தாமதப்படுத்தும்.

இது சர்வதேச நாணய நிதியத்தின் தாமதம் அல்ல, மாறாக சர்வதேச நாணய நிதியத்துக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் இலங்கையின் தாமதமாகும். ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அடுத்த கடன் தவணையாக 344 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவிக்கும்.

நிதியத்தின் விதிமுறைகளின் படி செலவுகளை ஈடுகட்டும் அடுத்த மின்சாரக் கட்டணத் திருத்தம் ஜூன் மாதத்தில் நடைபெறும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாணய நிதிய ஒப்பந்தங்களின்படி, இது கடந்த ஏப்ரல் மாதம் நடக்கத் திட்டமிடப்பட்டது.

(அ)

# தேர்தல் சட்டங்களை மீறுவோர் உடனே கைது செய்யப்படுவர்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



கொழும்பு, மே. 07

தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 04.00 மணியுடன் நிறைவடைந்துள்ள நிலையில் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வேளையிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

எனவே பொதுமக்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படவேண்டும்.

இந்தக் காலப் பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறுபவர்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள்-என்றார்.

(அ)

# போலி வாக்குச்சீட்டுகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, மே. 07

புத்தளம் - இரத்மல்யாய பிரதேசத்தில் உள்ள வாக்கெடுப்பு நிலையத்துக்கு அருகில் போலி வாக்குச்சீட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் புத்தளம் பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 8 போலி வாக்குச்சீட்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கை உட்பட பல்வேறு நாடுகளுக்கு கல்வி வீஸாவை வரையறுத்த பிரிட்டன்

கொழும்பு, மே. 07

இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து இங்கிலாந்திடம் கோரப்படும் பெறும் கல்வி வீஸா விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை பிரிட்டன் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

படிக்கும்போதே வேலை செய்யும் வீஸாவில் இங்கிலாந்துக்கு வருபவர்கள் விஸா காலாவதியான பிறகு நாட்டை விட்டு வெளியேறாமல் புகலிடம் கோரி விண்ணப்பிப்பதால் கல்வி விஸா விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை மட்டுப்படுத்த பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு முடிவு செய்துள்ளது.

.புகலிடம் வழங்கப்பட்டால், விண்ணப்பதாரர் வாழ்நாள் முழுவதும் பிரிட்டனில் தங்க முடியும் என்பதால் புகலிடம் கோருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# தமிழ்த் தேசியவாதப் பாடல் தேசிய மக்கள் சக்தி விளக்கம்

கொழும்பு, மே. 07

தமிழ் தேசியவாதம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாகத் தொடர்புடைய தமிழ்மொழி பிரசாரப் பாடல்களை வடக்கு மற்றும் கிழக்கில் வெளியிடுவதை தேசிய மக்கள் சக்தி மறுத்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் சில இளைஞர்களால் உருவாக்கப்பட்ட சில காணொளிகள் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் முகநூலில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

அந்த காணொளிகளுடன் தேசிய மக்கள் சக்தி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று அவர் கூறினார்.

"இதுபோன்ற காணொளிகள் ரக் செய்யப்படுவதில் தேசிய மக்கள் சக்திக்கு எந்த பொறுப்பும் இல்லை. சில இளைஞர்கள் இளங்குமரனின் முகநூலில், காணொளிகளை உருவாக்கி ரக் செய்துள்ளனர்," என்று அவர் கூறினார்.

இந்த விடயம் வார இறுதியில் சமூக ஊடகங்களில் கடுமையான விவாதத்தைத் தூண்டியது.

தமிழ் தேசியவாதத்தை யும் விடுதலைப் புலிகளை யும் ஊக்குவிக்க வடக்கு மற்றும் கிழக்கில் தேசிய மக்கள் சக்தி அதன் பிரசாரப் பாடலை ஏன் அனுமதித்தது என்று பலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

(அ)

## கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம்

## மகளிர் விவகார அமைச்சு அறிக்கை

கொழும்பு, மே. 07

கொட்டாஞ்சேனை மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசேட அறிக்கை யொன்றை விடுத்திருக்கும் மகளிர் விவகார அமைச்சு, இந்த விடயம் தொடர்பில் கல்வியமைச்சின் ஊடாக நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

அதேசமயம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஊடாகவும் பெற்றோரிடம் விவரங்கள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு!

கொழும்பு, மே. 07

கலேவெல, மகுலுகஸ்வெவ பகுதியில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் மகன் இரும்பு கம்பியால் தாக்கியதில் தந்தை உயிரிழந்தார் என மகுலுகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையை மறைக்க நேற்று முன் தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை மகன் பல திட்டங்களை வகுத்து வந்துள்ளார். அண்டை வீட்டுப் பெண் ஒருவரிடம் அவர் உதவி கேட்ட பிறகு, குடியிருப்பாளர்கள் இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் அளித்துள்ளனர்.

கலேவெல, மகுலுகஸ்வெவ நான்காம் மைல் கல் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய சமன் பிரியந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் மனைவியும் அவரின் மகனும் இந்த வீட்டில் வசித்ததாக மகுலுகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர். தந்தையைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் மகன் கைது செய்யப்பட்டுள்ளதாக மகுலுகஸ்வெவ பொலிஸார் கூறினர்.

(அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக ஆறு அதிகாரிகள் பதவி இடைநீக்கம்!

கொழும்பு, மே. 07

பயிற்சி பெறாத பெண்களை வெளிநாட்டு வேலைகளுக்காக கடத்தியமை தொடர்புடைய 2.5 பில்லியன் ரூபாய் மோசடி தொடர்பில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர் உட்பட ஆறு அதிகாரிகள் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தகவல்களின்படி, 2022 ஆம் ஆண்டு முதல் ஒகஸ்ட் 2024 இற்கு இடையில், சுமார் 35,000 பெண்கள் கட்டாய முன் புறப்படும் பயிற்சியை முடிக்காமலேயே வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இதன்போது குறித்த பெண்களிடம் இருந்து தலா 100,000 ரூபாய் முதல் 140,000 வரை வசூலிக்கப்பட்டதாகவும், முன் அனுபவத்தை பொய்யாகச் சான்றளிக்க போலி ஆவணங்கள் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த மோசடி ஊடகங்களால் அம்பலப்படுத்தப்பட்ட நிலையிலேயே தொடர்புயை 6 அதிகாரிகள் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

# மாணவி மரணம் குறித்து நடவடிக்கை வேண்டும்!

## வலியுறுத்துகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, மே. 07

கொட்டாஞ்சேனையில் தன்னுயிரை மாய்த்து கொண்ட பாடசாலை மாணவியின் வழக்கை தாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், எந்தவொரு தொடர்பும் இல்லாத நிலையில், கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனது எக்ஸ் தளத்தில் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட செய்தியில், எந்தவொரு குழந்தையும் இந்த வழியில் துன்பப்படக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 16 வயது பாடசாலை மாணவி ஒருவர், கடந்த காலச் சம்பவத்தின் போது தனியார் கல்வி வகுப்பில் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டு, துயரகரமாக தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பு வீதம் குறைந்தாலும் தேசிய மக்கள் சக்திக்கே வெற்றி!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நம்பிக்கை

கொழும்பு, மே. 07

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலைப் போன்று வாக்களிப்பு வீதம் பதிவாகாவிட்டாலும், தேசிய மக்கள் சக்திக்கு வெற்றி நிச்சயம். எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் கிராமங்களின் அபிவிருத்திகளை அதிகரிப்பதற்கான பலத்தை நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வழங்குவர் என்ற நம்பிக்கை இருக்கிறது என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்தார்.**



நேற்று வாக்களித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கத்தின் கீழ் மக்கள் எதிர்கொண்டுள்ள முதலாவது தேர்தல் இதுவா கும்.

கடந்த 6 மாதங்களில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் ஜனாதிபதியும் முன்னெடுத்த திட்டங்கள் தொடர்பில் மக்கள் நன்கு அறிவர். தற்போது மக்களின் வாழ்க்கைச் சுமை குறைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் கட்டியெழுப் பப்பட்டுள்ளது.

பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதால் மக்களின் வாழ்வாதார நெருக்கடிகள் குறைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் கிராமங்களின் அபிவிருத்திகளை அதிகரிப்பதற்கான பலத்தை நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வழங்குவர் என்ற நம்பிக்கை இருக்கிறது. நாம் பாரிய வெற்றியைப் பெற்றுக்கொள்வோம்.

தனித்தனியே இருப்பதைப் போன்று காண்பித்து ஒன்றிணைந்து அரசாங்கத்தின் மீது அவதூறு பரப்பிய எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் சிறந்த பாடம் புகட்டுவர்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலைப் போன்று வாக்களிப்பு வீதம் பதிவாகாவிட்டாலும், தேசிய மக்கள் சக்திக்கு வெற்றி நிச்சயம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் வீழ்ச்சியடைவது இயல்பானதாகும்.

ஒன்றிணைந்து அரசாங்கத்தை கவிழ்க்க நினைக்கும் எதிர்க்கட்சிகளே செல்வதற்கு இடமின்றி தனித்து விடப்படப்போகிறது- என்றார். (அ)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமான நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இராஜகிரிய, கொடுவேகொட விவேகாராம விகாரை, சந்திரலோக தஹம் பாடசாலைக் கட்டடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்கை பதிவு செய்தார். (அ)

# பிரதமர் ஹரிணி வாக்களிப்பு



கொழும்பு, மே. 07

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான தனது வாக்கை நேற்றுக் காலை கோட்டே, மிரிஹானவில் உள்ள சமுர்த்தி கட்டடத்தில் நடைபெற்ற வாக்களிப்பு நிலையத்தில் பதிவு செய்தார். (அ)

## 2025 முதல் காலாண்டில்

# இலஞ்ச குற்றத்துக்கு விதித்த அபராத வருமானம் ரூ.462,000

கொழும்பு, மே. 07

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலஞ்ச வழக்குகளில் அபராதம் மற்றும் இழப்பீடு அடிப்படையில் அரசாங்கத்துக்கு வருமானமாக 462,000 ரூபாய் கிடைத்துள்ளது.

எனினும், இலஞ்சம் பெற்ற பணத்தின் மதிப்பு அதை விட அதிகமாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலஞ்சம் பெற்ற மொத்தத் தொகை 6.5 மில்லியன் ரூபாய்கள் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

இந்த காலகட்டத்தில் ஆணையகம் 1,267 முறைப்பாடுகளைப் பெற்றது. அவற்றில் 1,127 முறைப்பாடுகள் விசாரணைக்காக முறைப்பாட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் 4,267 முறைப்பாடுகள் ஆணையகத்திடம் மேற்கொள்ளப்பட்டன.

இந்தநிலையில், இலங்கை முழுவதும் ஆணையகம் 24 சோதனைகளை நடத்தியது. 20 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஆறு பொலிஸ் அதிகாரிகள், ஒரு பாடசாலை அதிபர், ஒரு தொழில் அதிகாரி, ஒரு கள அதிகாரி மற்றும் குடிவரவு மற்றும் குடிவரவுத்துறையின் அதிகாரி ஆகியோர் அடங்குவதாக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையகம் தெரிவித்துள்ளது. கூடுதலாக, ஒரு பொது சுகா தார பரிசோதகர், ஒரு மேம்பாட்டு அதிகாரி, நீதி அமைச்சு ஊழியர், ஒரு மாகாண வருமான வரித்திணைக்கள மதிப்பீட்டு அதிகாரி மற்றும் ஆறு பொதுமக்க ளும்கைது செய்யப் பட்டவர்களில் அடங்குவர். (அ)

# ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு

கொழும்பு, மே. 07

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தலைமையிலான இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரக் குழுவினருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்தியத் தலைவர் சார்ள்ஸ் வைட்லே, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடெல், ஐரோப்பிய ஆணையத்தின் கொள்கை அதிகாரி கைடோ டொலாரா, ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் இலங்கைக்கான பிரதிநிதி கலிஜா அகிசேவா, ஐரோப்பிய ஆணையகத்தின் கொள்கை அதிகாரி பார்டோஸ் விளாடிஸ்லாவ் ஒட்டாச்செல் மற்றும் ஐரோப்பிய வெளி நடவடிக்கை சேவையின் கொள்கை அதிகாரி மைக்கல் டோடினி உள்ளிட்டவர்கள்



இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இங்கு, இரு தரப்பினரும் நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து விரிவாகக் கவனம் செலுத்தினர். மேலும், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் ஆடைகள் உட்பட ஏற்றுமதிப் பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். நாட்டின் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு விதிக்கப்படும் 44 வீத பரஸ்பர வரியின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் இதனால் முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

# பொலிஸாரைத் தாக்க முற்பட்ட சந்தேகநபர் மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே. 07

சீதுவ பகுதியில் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் செயற்பட்ட நபர் மீது பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் பொலிஸ் உத்தியோகத்தரை கூரிய ஆயுதத்தால் தாக்க முற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இதன்போது சந்தேகநபரை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தில் மந்தகதியில் வாக்களிப்பு





கல்முனை, மே 07

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அம்பாறை மாவட்டத் தில் சுமூகமாகவும் மந்தகதியிலும் இடம்பெற்றது. குறிப்பாக அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களிப்பில் ஈடுபட்டனர்.**



அம்பாறை மாவட்டத்தில் 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 4,78000 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். 458 வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன. இதில் 202 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களாகும்.

இதேவேளை தேர்தல் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அசம்பாவிதங்களை தவிர்க்கும் நோக்குடன் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றதும் அமைதியான முறையிலும் தேர்தல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பவ்ரல் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. மேலும், வாக்களிப்பு நிலையமான அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியை சுற்றி மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

(எ)

தேர்தல் நடவடிக்கைக்கு இடையூறு

## இரு வேட்பாளர் உட்பட மூவர் மட்டக்களப்பில் நேற்று கைது

மட்டக்களப்பு, மே 07

மட்டக்களப்பு - ஏறாவூர், வாழைச்சேனை பிரதேசங்களில் தேர்தல் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்த ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளின் இரு வேட்பாளர்கள் உட்பட 3 பேரை நேற்றுக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி அந்நூர் பாடசாலையில் வாக்களிப்பு நிலையத்துக்கு அருகில் ஒரு கட்சியின் வேட்பாளர் அவரின் ஆதரவாளர் உட்பட இருவர் வாக்காளர்களை சுதந்திரமாக வாக்களிக்க விடாது இடையூறு ஏற்படுத்தியதையடுத்து கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராங்கேணி வாக்களிப்பு நிலையத்துக்கு சென்ற ஐ.தே.க. வேட்பாளர் ஒருவர் தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு கோரி இடையூறு விளைவித்ததால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

## இலங்கை தமிழ் அரசு கட்சி அமோக வெற்றி பெறும்

மட்டக்களப்பு, மே 07

உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி அமோக வெற்றி பெறும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு களுவாஞ்சிக்குடி தேசிய பாடசாலையில் நேற்று தனது வாக்கினை சாணக்கியன் பதிவு செய்தார். இதன்போது கருத்து தெரிவித்த சாணக்கியன், பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் அரசுக்கட்சி தனது பலத்தை காட்டியது. அதேபோன்று, இந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ் அரசுக் கட்சி அமோக வெற்றி பெறும்- என்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

(எ)



## அரபுக்கல்லூரியில் முப்பெரும் விழா

அட்டாளைச்சேனை, மே 07

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை அரபுக்கல்லூரியில் முப்பெரும் விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

கல்லூரியின் பணிப்பாளர் சபையின் தலைவர் ஏ.அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் அரபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதி எம். ஜலால்தீன் விசேட விருந்தினராக கலந்து கொண்டார். (எ)




அம்பாறை மாவட்டம் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி 125 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பித்துக் கொண்டிருக்கும் நிலையில் கல்முனை வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப் பந்தாட்டம் மற்றும் எறிபந்தாட்டப் போட்டிகளில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 16,18 வயதுக்கு உட்பட்ட மாணவிகளுக்கான வலைப்பந் தாட்டப் போட்டிகள், 17, 20 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் மற்றும் 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான எறிபந்தாட்டப் போட்டிகளில் இந்தப் பாடசாலையின் அணிகள் சம்பியனாகி மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

(படங்கள்:- நூருல் ஹுதா உமர்)

## வாக்களிப்பு தினத்தில் மாத்திரம் மட்டக்களப்பில் 139 விதிமீறல்



மட்டக்களப்பு, மே 07

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பு தினத்தில் மாத்திரம் 139 விதிமீறல் சம்பவங்களும் வாகரையில் ஒரு தேர்தல் வன்முறைச் சம்பவம் பதிவாகியுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ஜே. ஜே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் உள்ள 12 உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தலில் பொது மக்கள் மிக ஆர்வத்துடனும் அமைதியான முறையிலும் வாக்களித்தனர் என்றும் அவர் கூறினார். (எ)

# அமைதியான முறையில் மட்டக்களப்பு வாக்களிப்பு

மட்டக்களப்பு, மே 07

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்களிக்கும் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதியான முறையில் நடைபெற்றன.

நேற்றுக் காலை 07.00 மணி முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று தேர்தல் தொகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள 447 வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிக்கும் பணிகள் சுமுகமான முறையில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 நகரசபை, ஒரு மாநகர சபை, 9 பிரதேச சபை உட்பட 12 உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள 144 வட்டாரங்களில்




இருந்து 146 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் தேசிய பட்டியல் ஆசனம் உட்பட மொத்தமாக 274 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத் தேர்தலில் 11 அரசியல் கட்சிகள், சுயேச்சைக்குழுக்கள் உட்பட 101 தரப்புகள் களமிறங்கின.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றதுடன் 447 வாக்களிப்பு நிலையங்களில் நேற்று வாக்களிப்பு நடைபெற்றது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தீர்வு ஒரு தீர்வாகாது!

## அதிகபட்ச நிதானத்தை கடைப்பிடிக்குமாறு இந்தியா, பாகிஸ்தானுக்கு ஐ. நா. அறிவுரை

நியூயோர்க், மே 07

**"இருநாடுகளும் அதிகபட்ச நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். பதற்றத்தை தணிக்க முன்வர வேண்டும். எந்தத் தவறும் செய்யாதீர்கள். இராணுவத்தீர்வு ஒரு தீர்வாகாது"- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், இந்தியா - பாகிஸ்தானுக்கு அறிவுரை கூறியுள்ளார்.**



காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளால், கலக்கமடைந்த பாகிஸ்தான், இந்த விவகாரம் தொடர்பில் விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையில் பாதுகாப்பு சபை கூட்டத்தை கூட்டுமாறு கோரியது. பொதுவான ஆலோசனையாக இன்றி சம்பந்தப்பட்ட தரப்புகள் மட்டுமே பங்கேற்க கூடிய மூடிய அறைக் கூட்டமாக இது நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை. இதனால், பாகிஸ்தானுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதற்கிடையே, இந்தக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு ஐ. நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றம் நீண்டகாலமாக உள்ளது. அதே நேரம் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் கண்டனத்துக்குரியது. அதில் பலியானவர்களுக்கு எனது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் காரணத்துக்காகவும் பொது மக்கள் மீதான பயங்கரவாதத் தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது. சமீபத்திய பிரச்னையால் இருநாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வருவது வேதனையளிக்கிறது. பிரச்னைகளுக்கு இராணுவம் மூலம் தீர்வு ஏற்படாது. எனவே, இருநாடுகளும் அதிகபட்ச நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். பதற்றத்தை தணிக்க முன்வர வேண்டும். எந்தத் தவறும் செய்யாதீர்கள். இராணுவத்தீர்வு ஒரு தீர்வாகாது"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# எங்களை தாக்கினால் பதிலடி கொடுப்போம்

## பாகிஸ்தான் திட்டவட்டம்

மொஸ்கோ, மே 07

எங்களை தாக்கினாலோ, சிந்து நதிநீரை நிறுத்தினாலோ பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர் இதொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான திரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவாகியுள்ளது. போர் பதற்றத்தை தணிக்க பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதேவேளை, சில நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆதரவளித்து வருகின்றன.

இதனிடையே பாகிஸ்தான் அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை நடத்தி இந்தியாவை ஆத்திரமூட்டி வருகிறது.

"சிந்து" என்ற பெயரில் நடத்தி வரும் பயிற்சியின் ஒருபகுதியாக இந்த ஏவுகணைச் சோதனையை நடத்தியதாக இராணுவம் கூறியுள்ளது. வீரர்களின் தயார் நிலை, ஏவுகணைகளின் துல்லியம் உள்ளிட்டவற்றை சோதிக்கும் வகையில் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டதாக மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தங்களை தாக்கினால் இந்தியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தப்படும் என்று பாகிஸ்தான் தொடர்ந்து மிரட்டி வருகிறது. இதை மீண்டும் ஒருமுறை வெளிப்படையாக தெரிவித்துள்ளது. இதன்படி ரஷ்யாவுக்கான பாகிஸ்தான் தூதுவர் முகமது காலித் ஜஜமாலி மொஸ்கோவில் நேற்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "எந்தவொரு தாக்குதலுக்கும் பதிலடி கொடுக்க பாகிஸ்தான் தயாராக இருக்கிறது. நாங்கள் எங்கள் முழு படையையும் பயன்படுத்துவோம். அது பாரம்பரிய ரீதியாகவும், அணு ஆயுத வழியிலும் இருக்கும்.

சிந்து நதிநீரை அபகரிக்கவோ, தடுக்கவோ அல்லது திருப்பிவிடவோ எடுக்கும் எந்தவொரு முயற்சியும் பாகிஸ்தானுக்கு எதிரான போர் நடவடிக்கையாக கருதப்படும். அதற்காக அணு ஆயுதம் உட்பட முழு பலத்துடன் பதிலடி கொடுக்கப்படும்.

பஹல்காம் தாக்குதல் குறித்து நியாயமான மற்றும் நம்பகமாக விசாரணை அவசியம். இதில், சர்வதேச சமூகத்தின் பங்கு இருக்க வேண்டும். சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் இந்த விசாரணைகளில் பங்கேற்க முடியும்- என்றார். (எ)



# பாக். இராணுவ தளபதியுடன் ஈரான் அமைச்சர் சந்திப்பு

லாகூர், மே 07

பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் ஈரான் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு நடத்தியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவாகியுள்ளது.

போர்ப் பதற்றத்தை தணிக்க பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதேவேளை, சில நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆதரவு அளித்து வருகின்றன.

இந்த நிலையில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி சயது அசீம் முனீரை ஈரான் வெளிவிவகார அமைச்சர் சயது அப்பாஸ் ஆர்சி நேற்று முன்தினம் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இந்தியாவுடனான மோதல் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. (எ)

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் காஸாவில் 51 பேர் உயிரிழப்பு!

காஸா, மே 07

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் 51 பேர் உயிரிழந்தனர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.



இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் அமைப்பின் பிடியில் இன்னும் 59 பேர் பணயக் கைதிகளாக உள்ளனர்.

அதேவேளை, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 51 பேர் உயிரிழந்தனர். இதில், ஹமாஸ் அமைப்பினரும் அடக்கம் என தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் உட்பட இதுவரை 52 ஆயிரத்து 550இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)



# சட்டவிரோத குடியேறிகளுக்கு 1000 டொலர்கள் வழங்கப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், மே 07

சட்டவிரோத குடியேறிகள் அமெரிக்காவை விட்டு வெளியேறினால் தலா ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். ஜனாதிபதியாக பொறுப்பேற்றது முதல் அவர் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். குறிப்பாக, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவில் வசித்து வரும் சட்டவிரோத குடியேறிகள் நாட்டை விட்டு தாமாக வெளியேறினால் அவர்களுக்கு தலா ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். மேலும், சட்டவிரோத குடியேறிகள் தங்கள் சொந்த நாட்டுக்கு செல்லத் தேவையான நடவடிக்கைகளை அமெரிக்கா செய்துதரும் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மழையால் ஆட்டம் ரத்து; ஹைதராபாத் ஏமாற்றம்

ஹைதராபாத், மே 07

மழையால் ஆட்டம் இரத்து செய்யப்பட்டதால் பிளே -ஒப் சுற்று வாய்ப்பை ஹைதராபாத் அணி இழந்தது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 54 லீக் ஆட்டங்கள் முடிந்துள்ளன. இந்த லீக் ஆட்டங்களின் முடிவில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, பஞ்சாப் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களில் உள்ளன.

முன்னாள் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் தொடரிலிருந்து வெளியேறின. இந்த நிலையில், நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் நடைபெற்ற 55ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி, 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 133 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்டப்ஸ், அஷூதோஷ் சர்மா இருவரும் தலா 41 ஓட்டங்கள் எடுத்தனர். சன்ரைசர்ஸ் தரப்பில் அதிகபட்சமாக பட் கம்மின்ஸ் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதையடுத்து 134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி




துடுப்பாட்டம் செய்ய இருந்தது. இந்த நிலையில், இன்னிங்ஸ் இடைவேளையின்போது பெய்த கனமழை காரணமாக ஆட்டத்தின் இரண்டாம் பாதி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மழை நின்ற பின் ஓவர்கள் குறைக்கப்பட்டு போட்டி மீண்டும் தொடங்கும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், மழை நின்ற பிறகும் ஆட்டத்தை மீண்டும் தொடங்க முடியாத அளவுக்கு மைதானத்தில் தண்ணீர் அதிகமாக இருந்தது. இதனால், ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது. இந்த முடிவால் ஹைதரபாத் அணி அதிகாரபூர்வமாக பிளே-ஒப் சுற்று வாய்ப்பை இழந்தது.

ஹைதராபாத் அணி தற்போது 7 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 8ஆவது இடத்தில் உள்ளது. அதேசமயம் டில்லி அணி 13 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் உள்ளது. (எ)

# ரி -20 தரவரிசையில் இந்தியா முதலிடம்

டுபாய், மே 07

ஐ. சி. சி. வருடாந்திர தரவரிசை பட்டியலில் ஒரு நாள் மற்றும் ரி - 20 போட்டிகளில் இந்தியா முதலிடம் பிடித் துள்ளது. சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) வருடாந் திர தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்த தர வரி சையில் மே 2024 முதல் விளையாடிய அனைத்து போட் டிகளும் 100 சதவீதமாகவும், முந்தைய இரண்டு ஆண்டு களின் போட்டிகளில் 50 சதவீதமாகவும் மதிப்பி டப்பட்டுள்ளது.

இதில் ஒருநாள் கிரிக்கெட் மற்றும் ரி - 20 வடிவில் இந்திய அணி முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதேவேளையில் டெஸ்ட் தரவரிசையில் 4ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. அவுஸ்திரேலிய அணி முதலிடத்தை பிடித்துள்ளது.ஒருநாள் தரவரிசையில் இந் தியா (124 புள்ளி) முதல் இடத்தில் உள்ளது. 2023ஆம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டி வரை முன்னேறியிருந்த இந்திய அணி, ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை வென்றதன் மூலம் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 2ஆவது இடத்தில் நியூசிலாந்து (109 புள்ளி), 3ஆவது இடத்தில் அவுஸ்திரேலியா (109 புள்ளி) அணிகள் உள்ளன. இலங்கை (104), பாகிஸ்தான் (104), தென்னாபிரிக்கா (96), ஆப்கானிஸ்தான் (91), இங்கிலாந்து (84), மேற்கு இந்திய தீவுகள் (83), பங்களாதேஷ் (76) ஆகிய அணிகள் முறையே 4 முதல் 10ஆவது இடங்களில் உள்ளன.

அதேபோன்று, ரி- 20 கிரிக்கெட் அணிகளுக்கான தரவரிசையில் நடப்பு உலக சம்பியனான இந்திய அணி (271 புள்ளி) முதலிடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா (262), இங்கிலாந்து (254), நியூசிலாந்து 249), மேற்கு இந்திய தீவுகள் (246), தென்னாபிரிக்கா (245), இலங்கை (235), பாகிஸ்தான் (228), பங்களாதேஷ் (225), ஆப்கானிஸ்தான் (223) அணிகள் முறையே 2 முதல் 10ஆவது இடங்களில் உள்ளன.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பில் நடப்பு சம்பியனாக உள்ள அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் கிரிக்கெட் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் 126 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்து (113), தென்னாபிரிக்கா (111), இந்தியா (105), நியூசிலாந்து (95), இலங்கை (87), பாகிஸ்தான் (78), மேற்கு இந்திய தீவுகள் (73), பங்களாதேஷ் (62), அயர்லாந்து (30) ஆகிய அணிகள் முறையே 2 முதல் 10ஆவது இடங்களில் உள்ளன.



# கம்மின்ஸ் சாதனை

ஹைதராபாத், மே 07

ஐ. பி. எல். தொடரில் முதல் அணித் தலைவராக பட் கம்மின்ஸ் சாதனை படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இதில், ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஹைதராபாத் வீரர்களின் அபார பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் டில்லி அணியினர் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர்.

இதனால், டில்லி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. ஹைதராபாத் தரப்பில் அணித் தலைவர் பட் கம்மின்ஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். முதல் இன்னிங்ஸ் முடிந்த பின்னர் மழை பெய்தது. மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மழை தொடர்ந்து பெய்ததன் காரணமாக ஆட்டம் அத்துடன் முடிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஹைதராபாத் அணித் தலைவர் கம்மின்ஸ் 3 விக்கெட்கள் வீழ்த்தியதன் மூலம் ஐ.பி.எல். தொடரில் வரலாற்று சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

அதாவது, பவர் பிளேவிற்குள் 3 விக்கெட்கள் வீழ்த்திய முதல் அணித் தலைவர் எனும் சாதனையை கம்மின்ஸ் படைத்துள்ளார். இந்த ஆட்டத்தில் கருண் நாயர், டுபிளஸ்சிஸ், அபிஷேக் பொரல் ஆகியோரின் விக்கெட்களை கம்மின்ஸ் வீழ்த்தினார். (எ)

# இலங்கை - பங்களாதேஷ் முதல் டெஸ்ட் ஜூன் 17இல்

கொழும்பு, மே 07

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி ஜூன் 17 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

பங்களாதேஷ் கிரிகெட் அணி சமீபத்தில் சிம்பாவேக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடர் 1-1 சமனில் முடிந்தது. இதையடுத்து, பங்களாதேஷ் அணியானது இம்மாதம் 17ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது.

இதன் பின்னர் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான இந்த ரி - 20 தொடரானது எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இத்தொடர்களை முடித்த கையோடு பங்களாதேஷ் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடர்களிலும் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பங்களாதேஷ் அணி, நான்கு ஆண்டுகளுக்கு பிறகு இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரு தரப்பு தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடருக்கான போட்டி அட்டவணை நேற்று அறிவிக்கப்பட்டது. இதன்படி காலி, கொழும்பு, பல்லேகல, தம்புள்ளை ஆகிய 4 மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தத் தொடர் ஜூன் 17ஆம் திகதி முதல் ஜூலை 10ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

போட்டி அட்டவணை விவரம் வருமாறு,
முதல் டெஸ்ட், ஜூன் 17 - 21 காலி,
2ஆவது டெஸ்ட், ஜூன் 25 - 29 கொழும்பு,
முதல் ஒருநாள் போட்டி: ஜூலை 2, கொழும்பு,
2ஆவது ஒருநாள் போட்டி: ஜூலை 5, கொழும்பு,
3ஆவது ஒருநாள் போட்டி: ஜூலை 8, பல்லேகல,
முதல் ரி - 20 போட்டி: ஜூலை 10, பல்லேகல,
2ஆவது ரி - 20 போட்டி: ஜூலை 13, தம்புள்ளை,
3ஆவது ரி - 20 போட்டி: ஜூலை 16, கொழும்பு. (எ)

# சென்னை - கொல்கத்தா இன்று மீண்டும் மோதல்

கொல்கத்தா, மே 07

சென்னை - கொல்கத்தா அணிகள் மோதும் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஐ. பி. எல். தொடரில் கடந்த 3ஆம் திகதி பெங்களூருவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி பெங்களூரு வெற்றி பெற்றது.

சென்னை அணி அடுத்த போட்டியில் இன்று கொல்கத்தா அணியுடன் மோதுகிறது. இந்தப் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறுகிறது. இந்த நிலையில், சென்னை அணி வீரர்கள் நேற்று கொல்கத்தா சென்றடைந்தனர். சென்னை அணி வீரர்களுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.(எ)







# வைபவ் சூர்யவன்ஷியை பாராட்டிய பிரதமர் மோடி

பாட்னா, மே 07

14 வயதில் சதம் விளாசிய வைபவ் சூர்யவன்ஷியை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

7ஆவது கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டி பீகார் தலைநகர் பாட்னாவில் நேற்று முன்தினம் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக தொடங்கியது. போட்டியை பிரதமர் மோடி காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இதனிடையே, இளம் கிரிக்கெட் வீரர் வைபவ் சூர்ய [illegible] பாராட்டினார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், சூர்யவன்ஷி இளம் வயதிலேயே மிகப்பெரிய சாதனை படைத்துள்ளார். வைபவ் சூர்யவன்ஷியின் வெற்றிக்குப் பின்னால் கடினமான உழைப்பு உள்ளது. மேலும், இதன்மூலம் ஒருவர் எவ்வளவு அதிகமாக விளையாடுகிறாரோ, அவ்வளவு அதிகமாக அவர் மிளிர்வார் என தெரிகிறது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிலங்கையில்...

பெற்ற தேசிய மக்கள் சக்தி 487 உறுப்பினர்களை பெற்றுள்ளது.

இதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தி 2 இலட்சத்து 20 ஆயிரத்து 317 வாக்குகளை பெற்று 211 உறுப்பினர்களையும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 146 வாக்குகளை பெற்று 100 உறுப்பினர்களையும் பெற்றன.

எனினும், பல பிரதேச சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி தனித்து ஆட்சியமைக்கும் நிலைமை உள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி பின்னடைவு கண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வியட்நாமில்...

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட 5 பேர் வியட்நாம் சென்றிருந்தனர். இவர்கள் அந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான விசேட விமானம் மூலமாக நேற்று நாட்டை வந்தடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## உலக...

கூட்டாண்மையை பிரதிபலிக்கிறது.

அஜய் பங்காவின் வருகையின்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் முதலீட்டை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் தனியார் முதலீட்டாளர்களையும் அவர் சந்தித்து பேசுவார்.

இதேவேளை, உலக வங்கியின் தலைவர் ஒருவர் சுமார் 20 ஆண்டுக ளுக்கு பின்னர் நாட்டுக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 50 சதவீமானவர்...

இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் 63.6 சதவீத வாக்களிப்பு பதிவாகியுள்ளது. திருகோணமலையில் 67 வீதத்தினரும் மட்டக்களப்பில் 61சதவீதத்தினரும் அம்பாறையில் 63 வீதத்தினரும் வாக்களித்துள்ளனர்.

கொழும்பில் 50, களுத்துறையில் 61, பதுளை 60, பொலநறுவை 53, நுவரெலியா 60, அநுராதபுரம் 60, மொனராகலை 61, கேகாலை 63, காலி 63, புத்தளம் 53, மாத்தறை 58, மாத்தளை 62, இரத்தினபுரி 60 வீதம் என வாக்க ளிப்பு பதிவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

இந்த நாட்டில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமைதியான ஜனநாயக சுதந்திரம், எதிர்காலத் தேர்தல்கள் அனைத்திலும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தேர்தல் வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தல் செயல்பாட்டை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் மக்கள் அனுபவித்துள்ளனர். இது இந்த நாட்டின் அரசியல் கலாசாரமாக மாற வேண்டும் - என்றார். (அ)

## ரணில்...

விக்கிரமசிங்க இந்தியா செல்வது இது நான் காவது தடவையாகும்.

இந்தியாவின் கர் நாடகா மாநிலத்தின் பெங்களூரில் தி இந்து நாளிதழின் ஐந்தாவது பதிப்பு விழாவில் சிறப்புரை ஆற்றவே அவர் அங்கு செல்கிறார்.

இந்த நிகழ்வில் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள் ளார். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல், வணிகம், கல்வி, விளையாட்டு மற்றும் கலைத் துறைகளை சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழர்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளின்படி யாழ்ப்பாணம் மாநகர சபை, பருத்தித்துறை பிரதேச சபை, நல்லூர் பிரதேச சபை, வலி. கிழக்கு பிரதேச சபை, வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை என்பவற்றில் இலங்கை தமிழ் அரசு கட்சி முன்னிலை வகிக்கிறது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நகர சபைகளில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முன்னிலை வகிப்பதுடன், யாழ். மாநகர சபை உட்பட பல சபைகளில் தமிழ் அரசுக் கட்சிக்கு நெருக்கமான போட்டியை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ. பி. டி. பி.) இந்தத் தேர்தலில் பலத்த சரிவை சந்தித்துள்ளது. அந்தக் கட்சி பல இடங்களில் 4 அல்லது அதற்கு பின்னரான இடங்களுக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலுடன் ஒப்பிடுகையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனினும், வலி. கிழக்கு பிரதேச சபையில் இரண்டாவது இடத்தையும் யாழ். மாநகர சபையில் மூன்றாவது இடத்தையும் அந்தக் கட்சி பிடித்துள்ளது.

இதேவேளை, உத்தியோகபூர்வ தகவலின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் வெருகல் பிரதேச சபையில் தனித்து ஆட்சியமைக்கும் நிலையில் தமிழ் அரசுக் கட்சி உள்ளது. அத்துடன், தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பல இடங்களில் தேசிய மக்கள் சக்தி முன்னிலை வகிக்கிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## கிளிநொச்சியில்...

வென்று தனித்து ஆட்சியமைக்கவுள்ளது. 7 ஆயிரத்து 319 வாக்குகளை பெற்று தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்கள், 5 ஆயிரத்து 58 வாக்குகளுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 4, 2 ஆயிரத்து 712 வாக்குகளுடன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், 2 ஆயிரத்து 195 வாக்குகளுடன் ஐக்கிய மக்கள் சக்தி, ஆயிரத்து 664 வாக்குகளுடன் சுயேச்சை குழு ஆகியன தலா 2 ஆசனங்களை கைப்பற்றியுள்ளன.

20 உறுப்பினர்களை கொண்ட பூநகரி பிரதேச சபையில் 18 ஆயிரத்து 634 வாக்காளர்கள் பதிவாகியிருந்தனர். 12 ஆயிரத்து 443 பேர் வாக்களித்தனர். 251 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இலங்கை தமிழ் அரசு கட்சி 5 ஆயிரத்து 171 வாக்குகளை பெற்று 10 ஆசனங்களை வென்று பெரும்பான்மை பெற்றுள்ளது. 2 ஆயிரத்து 355 வாக்குகளை பெற்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் ஆயிரத்து 884 வாக்குகளை பெற்று தேசிய மக்கள் சக்தியும் தலா 3 உறுப்பினர்களை பெற்றன. ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 971 வாக்குகள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 325, வாக்குகள், சுயேச்சை குழு - 01 632 வாக்குகள், சுயேச்சை குழு - 02 486 வாக்குகளை பெற்று தலா ஓர் ஆசனத்தை வென்றன.

13 உறுப்பினர்களை கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் 10 ஆயிரத்து 998 வாக்காளர்கள் பதிவாகியுள்ளனர். 6 ஆயிரத்து 975 பேர் வாக்களித்தனர். 120 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி 3 ஆயிரத்து 40 வாக்குகளை பெற்று 6 ஆசனங்களை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. ஆயிரத்து 511 வாக்குகளுடன் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஆயிரத்து 349 வாக்குகளுடன் தேசிய மக்கள் சக்தி என்பன தலா 3 ஆசனங்களையும் 508 வாக்குகளை பெற்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் வென்றுள்ளன. (ஐ)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் அரசு கட்சி முன்னிலை!

முல்லைத்தீவு, மே 08

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசனங்கள் அடிப்படையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்னிலை வகிக்கிறபோதிலும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. கட்சிகள் கூட்டு சேர்ந்தே ஆட்சியமைக்க வேண்டிய நிலைமை உள்ளது.

22 உறுப்பினர்களை கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் 41 ஆயிரத்து 212 வாக்காளர்கள் பதிவாகினர். 23 ஆயிரத்து 559 பேர் வாக்களித்தனர். 554 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி 10 ஆயிரத்து 816 வாக்குகளை பெற்று 11 ஆசனங்களை பெற்று முன்னிலை வகிக்கிறது. தேசிய மக்கள் சக்தி 4 ஆயிரத்து 28 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களை வென்றது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி 2 ஆயிரத்து 652 வாக்குகளுடன் 2 ஆசனங்களையும் சுயேச்சை குழு 1 - 2 ஆயிரத்து 491 வாக்குகளை பெற்று 2 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆயிரத்து 174 வாக்குகள், ஐக்கிய மக்கள் சக்தி ஆயிரத்து 26, சிறீ லங்கா தொழிலாளர் கட்சி 658 வாக்குகள் பெற்று தலா ஓர் ஆசனத்தையும் வென்றன.

13 உறுப்பினர்கள் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையில் 6 ஆயிரத்து 354 வாக்காளர்கள் பதிவாகியிருந்தனர். 4 ஆயிரத்து 679 பேர் வாக்களித்திருந்தனர். 59 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இலங்கை தமிழ் அரசு கட்சி 1,364 வாக்குகளுடன் 4 உறுப்பினர்களை பெற்று முன்னிலை வகிக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி 990 வாக்குகளுடன் 3, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 808 வாக்குகளுடன் 2, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 500 வாக்குகளுடன் 2, தேசிய மக்கள் சக்தி 607 வாக்குகளுடன் 2 உறுப்பினர்களையும் வென்றன.

13 உறுப்பினர்களை கொண்ட துணுக்காய் பிரதேச சபையில் 8 ஆயிரத்து 660 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 5 ஆயிரத்து 544 வாக்காளர்கள் பதிவாகியிருந்தனர். 106 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

1,594 வாக்குகளை பெற்று இலங்கை தமிழ் அரசு கட்சி 4 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1,082 வாக்குகளுடன் 3 ஆசனங்களையும் 804 வாக்குகளுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 2 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 492 வாக்குகள், இலங்கை தொழிலாளர் கட்சி 254 வாக்குகள், ஐக்கிய தேசிய கட்சி 605 வாக்குகள், சுயேச்சை குழு -01 388 வாக்குகளை பெற்று தலா ஓர் ஆசனத்தை வென்றன.

# வாக்களிப்பு நிலையத்தில் செய்திக்காக படம்பிடித்த செய்தியாளருக்கு மிரட்டல்!

யாழ்ப்பாணம், மே 07

உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே செய்தி சேகரிப்புக்காக வாக்களர்களை படம்படித்த சுயாதீன செய்தியாளர் செ. ரவிசாந்துக்கு பொலிஸார் மிரட்டல் விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் உள்ளூராட்சி சபைகள் தேர்தல் நடைபெற்றது. இதன்போது, குப்பிழான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் குறித்த செய்தியாளர் செய்தி சேகரிப்புக்காக படம் பிடித்துள்ளார்.

இதன்போது, அங்கு நின்ற பொலிஸார் அவரை மறித்து படம்பிடிக்கக் கூடாது என்று கூறியதுடன், செய்தியாளரின் ஊடக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை பறித்ததுடன், சுமார் 20 நிமிடங்களுக்கு மேல அவரை தடுத்து வைத்தனர். அத்துடன், அவரை கைது செய்யப் போவதாகவும் மிரட்டினர்.

பின்னர், அவர் எடுத்த படங்களை அவரைக் கொண்டே அழிக்க வைத்ததுடன், செய்தியாளரின் ஊடக, தேசிய அடையாள அட்டைகளை படம் பிடித்ததுடன், தேர்தல் சமயத்தில் படம் எடுக்கக்கூடாது என்றும் கூறினர். வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே செய்தி சேகரிப்புக்காக படம் எடுப்பதற்கு அனுமதி உள்ளது என்று செய்தியாளர் கூறிய போதும் பொலிஸார் அதனை மதிக்கவில்லை என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# இலங்கை தமிழ் அரசு கட்சியே மன்னாரிலும் முன்னிலை!

## தனித்து ஆட்சியமைக்கும் நிலை இல்லை!

மன்னார், மே 08

மன்னார் மாவட்டத்தின் 3 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் அதிகாலை வெளியாகியிருந்தன.

இதன்படி, மன்னார் பிரதேச சபையில் 22 உறுப்பினர்களில் இலங்கை தமிழ் அரசு கட்சி 5 உறுப்பினர்களை பெற்று முன்னிலை வகிக்கிறது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 4, ஐக்கிய மக்கள் சக்தி 4, தேசிய மக்கள் சக்தி 3, இலங்கை தொழிலாளர் கட்சி 2, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சுயேச்சை குழு - 01 ஆகியன தலா ஓர் ஆசனத்தை வென்றன.

16 உறுப்பினர்களை கொண்ட முசலி பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 5, இலங்கை தொழிலாளர் கட்சி 4, தேசிய மக்கள் சக்தி 3, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, சுயேச்சை குழு - 01 ஆகியன தலா ஓர் ஆசனத்தை கைப்பற்றின.

21 உறுப்பினர்களை கொண்ட மாந்தை மேற்கு பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி 5 ஆசனங்களை பெற்று முன்னிலை பெற்றுள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன தலா 4 ஆசனங்க ளையும் சிறீ லங்கா தொழிலாளர் கட்சி 2, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியன ஓர் ஆசனத்தையும் வென்றன.

## வெருகல் தமிழரசிடம்

திருகோணமலை, மே 07

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச சபையின் ஆட்சியை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றியுள்ளது.

13 உறுப்பினர்களை கொண்ட வெருகல் பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசு கட்சி 8 ஆசனங்களைபெற்றது. தேசிய மக்கள் சக்தி 3, ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும் வென்றன. (ஐ)

17 உறுப்பினர்களை கொண்ட மொறவெவ பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 9 உறுப்பினர்களை பெற்று பெரும்பான்மை பெற்றது. சிறீ லங்கா பொதுஜன பெரமுன 3, ஐக்கிய மக்கள் சக்தி 3 ஆசனங்களை பெற்றன. இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன ஓர் ஆசனத்தை கைப்பற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமைதியான முறையில் தேர்தலை நடத்தினோம்!

## பிமல் ரத்நாயக்க பெருமிதம்



கொழும்பு, மே. 07

**முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைதியான தேர்தல் ஒன்றை அரசாங்கம் நடத்திக் காட்டியுள்ளது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.**

குருநாகல் சென். ஜோன்ஸ் கல்லூரியில் தன் குடும்பத்தினர் சகிதம் வாக்களிக்க வந்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

கடந்த காலங்களை விட நாட்டில் ஒரு மாற்றம் நிகழ்ந்துள்ளது. தேர்தல் ஒன்று நடைபெறுகின்றதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு இன்று அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கம் அந்தளவுக்கு அமைதியான தேர்தல் ஒன்றை நடத்திக் காட்டியுள்ளது. படிப்படியாக ஏனைய விடயங்களிலும் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவோம் - என்றார். (அ)

# வாக்களிப்பு நிலையமருகே வாள்களுடன் இருவர் கைது!





கிளிநொச்சி, மே. 07

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வா நகர் பகுதியில் வாக்களிப்பு நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் கார் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் வாள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வாக்களிப்பு நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் சந்தேகத்திடக்கிடமான முறையில் இருந்த கார் ஒன்றைச் சோதனையிட்டபோதே அதிலிருந்து இரண்டு வாள்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய காரையும் பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஓர் இடத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதுகூடத் தெரியாத ஆளும் தரப்பு!

## நிர்மால் ரஞ்சித் தேவசிறி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 07

ஆளும் கட்சியினருக்கு ஓர் இடத்தில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது கூடத் தெரியாது என மனித உரிமை செயற்பாட்டாளரும் பேராசிரியருமான நிர்மால் ரஞ்சித் தேவசிறி குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர், கொள்கைப் பிரகடனத்தின்போது வழங்கப்படும் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமை யதார்த்தமானது என அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொய்யுரைப்பதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் யதார்த்தமானவை என அவர் தெரிவித்தார்.

தற்பொழுது ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் எவ்வித அனுபவமும் இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் ஓர் இடத்தில் எவ்வாறு பேசுவது நடந்து கொள்வது என்பது குறித்த புரிதல் அற்றவர்கள் என அவர் தெரிவித்தார். (அ)

# நாடு முன்னேறிவிட்டது!

## வாக்களித்த பின் கூறினார் ரணில்

கொழும்பு, மே. 07

பொது மக்கள் வாக்களிப்பதில் ஆர்வம் இன்றி இருப்பதில் இங்கிலாந்து போல இலங்கையும் முன்னேறி விட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கைச் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் தேர்தலில் வாக்களிக்கும் ஆர்வம் பொது மக்களிடம் இல்லை. கணிசமான பொதுமக்கள் வாக்களிக்க வரப் போவதில்லை.

முக்கியமான சில வேட்பாளர்கள் இருக்கும் பிரதேசங்களில் வாக்களிப்பு வீதம் சற்று அதிகரிக்கலாம். ஆனால் ஏனைய இடங்களில் வாக்களிப்பு மந்தமாகவே இருக்கும்.

நாட்டு மக்கள் வாக்களிப்பது குறித்து அந்தளவுக்கு ஆர்வம் அற்றுப் போயிருக்கின்றார்கள். அந்த வகையில் நம் நாடும் இங்கிலாந்தைப் போன்று முன்னேறி விட்டது - என்றார். (அ)

# பிரதமரை சந்தித்து பேசிய ஐரோப்பிய ஒன்றியக் குழு!



கொழும்பு, மே. 07

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஜி.எஸ்.பி. பிளஸ் கண்காணிப்புப் பணியின் ஒரு பகுதியாக, ஐரோப்பிய வெளிவிவகார சேவையின் தெற்காசியப் பிரிவின் தலைவர் சாள்ஸ் வைட்லியை நேற்று முன் தினம் திங்கட்கிழமை சந்தித்தார்.

ஐரோப்பிய ஒன்றியக் குழுவை வரவேற்ற பிரதமர், குறிப்பாக ஜி.எஸ்.பி. சட்டகத்தின் ஊடாக, ஐரோப்பிய ஒன்றியத்துடனான கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

வறுமை ஒழிப்பு, டிஜிட்டல் பரிமாற்றம் மற்றும் "கிளீன் சிறிலங்கா" திட்டம் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கிய முன்னுரிமைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

கலந்துரையாடலின் போது, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் குறித்து பிரதமர் குறிப்பாக வலியுறுத்தியதுடன், போதைப்பொருள் கடத்தல், மனிதக் கடத்தல் போன்றவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான சட்டத்தை இயற்றுவது குறித்தும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட தற்போதைய சட்ட சீர்திருத்தங்கள் குறித்தும் கவனப் படுத்தினார்.

இலங்கை அறிமுகப்படுத்தியுள்ள புதிய கொள்கைகளை, குறிப்பாக ஜி.எஸ்.பி. பிளஸ் பொறிமுறையின் முக்கிய நோக்கங்களுடன் இணங்கிச்செல்லும் கொள்கைகளை ஐரோப்பிய ஒன்றியக் குழு வரவேற்றது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகளுக்காக மீளவும் விண்ணப்பம் செய்யும் முறை குறித்த வழிகாட்டுதலை அவர்கள் வழங்கியதுடன், இலங்கையின் முறையான அபிவிருத்தி முயற்சிகளை ஆதரிப்பதற்கான தமது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தினர். (அ)

# கோடரியுடன் வாக்களிக்க அனுமதி

கொழும்பு, மே. 07

பழங்குடியின மக்கள் வாக்குச் சாவடிக்கு கோடரிகளை எடுத்துச் செல்ல தேர்தல் ஆணையகம் முதல் முறையாக அனுமதித்துள்ளது.

பழங்குடி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையைத் தொடர்ந்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோடரியை தோழில் ஏந்திச் செல்வது பழங்குடி நாட்டுப்புற பாரம்பரியத்தின் அடிப்படை அங்கமாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசுக்கு சார்பாக நடக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு!

## வாக்களித்த பின்னர் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, மே. 07

தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படுவதாக முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பில் பங்கேற்ற பின்னர் அவர் ஊடகங்களிடம் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத் தரப்பினர் தொடர்பிலான முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு மிக மந்தகதியில் செயற்படுகிறது.

எதிர்க்கட்சிகள் வெற்றியீட்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என ஜனாதிபதி கூறிய விடயம் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.இந்த நிலைமை மிகவும் கவலையளிக்கிறது.

தேர்தல் பிரசாரக் கண்காணிப்புப் பணிகளை தேர்தல் ஆணைக் குழுவும் உரிய நிறுவனங்களும் சரியான முறையில் மேற்கொள்ளவில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பு வீதம் குறைவடையும்.

நாட்டின் பல்வேறு அரச துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.பாதாள உலகக் குழுச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org